KK11T

கன்னியாகுமரி மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2024

வகுப்பு 11

பொதுத்தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

குறிப்பு: 1. விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
2. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 14×1=14

1) சரியானதைத் தேர்ந்தெடுக்க.
அ) வரை - மலை
ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - யானை
ஈ) புடவை - கடல்
i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு
ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு
iii) இ - சரி; ஆ - தவறு
iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

2) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

3) பிழையான தொடரைக் கண்டறிக.
அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.
ஆ) ஏதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.
இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

4) ஒப்புரவு என்பதன் பொருள்
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5) பாயிரம் அல்லது .................. அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

6) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

7) **கூற்று** - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.
**விளக்கம்** - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.
இ) கூற்று தவறு, விளக்கம் சரி. ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு.

8) தவறான இணையைத் தேர்வு செய்க.
அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) கடல் + அலை - உயிர் + மெய்
இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

9) காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்

10) 'மாசற்றார்' இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.
அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்,
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஆ) தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும்,
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

11) 'பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்' - இக்கவிதை நூலின் ஆசிரியர்
அ) மல்லார்மே ஆ) வால்ட் விட்மன்
இ) பாப்லோ நெரூடா ஈ) மனோரமா பிஸ்வாஸ்

12) நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

13) 'தவமும் ஈகையும்' - இச்சொற்களின் இலக்கணக்குறிப்பு
அ) உவமைத்தொகை ஆ) எண்ணும்மை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

14) 'வான் பொய்த்தது' - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15) குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

16) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

17) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?

18) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

20) 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7×2=14

22) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர் உருவாக்குக:**
நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

23) **மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கனை, கணை

24) **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக:**
அ) அறிந்து ஆ) வைத்தார்

25) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**
அ) சிறுகோல் ஆ) மனையென

26) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**
வைகை

27) **கலைச்சொல் தருக:**
அ) Value education ஆ) Ethnic group

28) **வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக:**
தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

29) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**
அ) தேசம் ஆ) வாடகை

30) உவமை, உருவகம் வேறுபடுத்துக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×4=8

31) "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

33) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

34) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×4=8

35) சமணப் பள்ளிகளும், பெண் கல்வியும் - குறிப்பு வரைக.

36) 'மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37) வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

38) 'நேரடிமொழி' என்பதை நும் பாடவழி நின்று எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** 3×4=12

39) வேற்றுமை அணி **அல்லது** உவமை அணியை விளக்குக.

40) **கீழ்க்காணும் பாடலைப் படித்து மையக்கருத்து எழுதி, ஏதேனும் மூன்று நயங்களை விளக்குக:**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

- **பாரதியார்**

41) **தமிழாக்கம் தருக:**

அ) The pen is mighter than the sword.
ஆ) Winners don't do different things, they do things differently.
இ) A picture is worth a thousand words.
ஈ) Work while you work and play while you play.

42) **புதிர்களுக்கான விடைகளை தேர்ந்தெடுத்து எழுதுக:**

**(கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)**

அ) எலியும் நுழையும், எழிலரசு கையும் நுழையும் ..............
ஆ) அடிக்கவும் செய்யலாம், கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம் ..............
இ) அறிவின் பெயரும் அதுதான், அம்புலின் பெயரும் அதுவே தான் ..............
ஈ) பூவின் உறுப்பும் நானே, புன்னகையின் பிறப்பிடமும் நானே ..............

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



43) கீழ்க்காணும் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க:

உடல் வளர்த்தேன்!

உயிர் வளர்த்தேன்!!

இயற்கை உணவுத் திருவிழா

நாள் : தை 5 முதல் 11 வரை நேரம் : மாலை 6 – 10 மணி இடம் : தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல.....

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) மதினா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45) அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக.

ஆ) 'செயல்' என முடியும் திருக்குறளை எழுது.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com